BONBON SERIES No. III.

# TENALIRAMAN

(TAMIL)

BY
V. RAJAGOPALA AIYANGAR,
*Editor of "Agananuru" and Author of the Tamil Works of 'Greek Legends,' Scott's 'Ivanhoe,' and The 'Talisman,' etc., etc.*

Approved by the Text-Book Committee, Travancore

MADRAS:
...OMARASAWMY NAIDU & SONS
1922

[Price 2 As.

O-,3x.
N22
409287

PRINTED AT
THE GUARDIAN PRESS, BROADWAY, MADRAS.

1922

# தென்னாலி ராமன் கதை

இஃது
அகநானூற்றுப் பதிப்பாசிரியரும்
தமிழ் ஐவன்ஹோ முதலிய புஸ்தகங்களின்
ஆசிரியருமான

**வே. இராஜகோபாலய்யங்கார்**

எழுதியது

சென்னை :
**ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்**
1922

ரெஜிஸ்தர் செய்தது] [விலை 2 அணா

# ஸ்ரீ தென்னாலி ராமன் கதை

"அறிவுடையார் எல்லாம் உடையார்"—குறள்.

## முதலாம் அத்தியாயம்

### தென்னாலி ராமன் [illegible]னானது

வட தேசத்திலே தென்னாலி என்று ஒரு பட்டண முண்டு. அப்பட்டணத்திலே ஓரேழைப் பிராம்மணனுக்கு ராமன் என்றொரு குமார னிருந்தான். அவன் வடிவழகிலும் குணத்திலும் மிக்கவனாயிருப்பதைக் கண்ட ஒரு சன்னியாசி, அவனுக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்து, "அப்பா! இம் மந்திரத்தை மூன்று கோடிதரம் ஓர் இரவில் ஒரு காளி கோயிலிலே போயிருந்து ஜபித்தால், காளி ப்ரஸன்னையாகி, உனக்கு இஷ்டமான வரத்தை தந்தருள்வாள்" என்றார்.

ராமன் நல்லதென்று, அந்த ஸாது உபதேசித்த மந்திரத்தை வெகு பக்தியுடன் கிரகித்துக்கொண்டு, ஒரு நாளிரவில் அவ்வூர்க் காளிகோயிலுக்குச் சென்று, மூன்று கோடி உரு ஜபித்தான். உடனே பத்திரகாளி ஆயிரம் முகத்துடன் கத்தி, கேடகம், வில், வாள், கதை, தோமரம் முதலிய ஸகல ஆயுதங்களையும் ஏந்தி ப்ரஸன்னமானாள். ராமன் இயல்பிலே மிகவும் துணிவுடையவனாதலால், அந்தக்கோர ரூபியாகிய பத்திரகாளிக்குச் சிறிதும் அஞ்சாமல், நகைக்கத் தொடங்கினான். காளி, "அடா! பயலே! என்னுடைய

அகோர ரூபத்தைக் கண்டு, தேவர்களும் அஞ்சியோட, நீ நகை செய்தனையே. அவ்வாறு செய்வதற்கு என்னடா அபூர்வத்தைக் கண்டாய்?" என்று அதட்டிக் கேட்டாள்.

ராமன், "ஹே! லோகமாதா! ஒரு விண்ணப்பம்! தேவரீர் ஆயிரம் திருமுகங்களோடும், இரண்டு கைகளோடும் எனக்குக் காட்சி தந்திருக்கிறீர்கள். மனிதர்களாகிய எங்களுக்கு ஜலதோஷம் பிடித்துக்கொண்டால், ஒரு மூக்கை இரண்டு கைகளாலும் சிந்தக் கூடவில்லை. தாங்கள் ஆயிரம் மூக்கையும் ஜலதோஷம் பிடித்த காலத்தில் இரண்டு கைகளைமாத்திரம் கொண்டு எப்படிச் சிந்தியிருப்பீர்கள்? சிந்தக் கூடாமல், மூக்கும் சளியுமாகக் கண்டோர் அருவருக்கத் தக்கவாறு நின்றிருப்பீர்களன்றோ? அதை நினைத்துக் கொண்டேன். எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது" என்றான்.

உடனே காளி சிறிது கோபங்கொண்டு, "அடா! பயலே! என்னைக் கண்டு நீ விகடம் பண்ணினாயாதலால், இன்றுமுதல் நீ விகடகவி யாகக்கடவாய்" என்றாள். அதற்கு ராமன், "ஓ! ஓ! நல்ல வரம் கொடுத்தீர்கள்! நல்ல வரம் கொடுத்தீர்கள்! அப்படிப் பார்த்தாலும் விகடகவி, இப்படிப் பார்த்தாலும் விகடகவி" என்றான். காளி அவனுடைய வாக் ஜரியைக் குறித்து மெச்சி, "நீ ராஜ ஸபை புகழும்படியான சிறந்த விகடனாவாய். உனக்கு ஐசுவரியம் பெருகும்" என்று சொல்லிவிட்டு மறைந்து போனாள். அன்று முதல் அவன் விகடம் செய்வதில் வெகு ஸமர்த்தனாகி, தென்னாட்டிலே ராஜ்யபாரம் வகித்து வந்த சிறந்த ராஜாவான ராயரிடத்தில் ஆஸ்தான விதூஷகனாக அமர்ந்தான்.

## இரண்டாம் அத்தியாயம்

### ராமன் தன் மைத்துனனை மரண தண்டனையினின்று விடுவித்தது

ஒருநாள் ராமனுடைய மைத்துனன் இராயர் கோபிக்கும்படி ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டான். அதனால் அவர் அவனுக்கு மரண தண்டனை விதித்துவிட்டார். இந்தச் செய்தி ராமன் காதிற்கு எட்டிற்று. அவன் உடனே ராயர் ஸபைக்கு வந்தான். ராயர் அவனைத் தூரத்தில் கண்டதும், "ஓ! ராமா! நீ வரவேண்டாம்! வரவேண்டாம்! நீ கேட்கப்போவது எனக்குத் தெரியும். நீ சொல்வதை இந்த ஸமயம் கேட்கவே மாட்டேன். அதற்கு விரோதத்தையே செய்வேன். இது உண்மை, உண்மை" என்று சொன்னார்.

ராமன் இதுதான் தருணமென்று, "மஹாராஜாவே! ஒரு விண்ணப்பம். அடியேனுடைய மைத்துனன் மிகவும் துஷ்டன். அவனை இப்பொழுதே தூக்கிற் போட வேண்டும். விடக்கூடாது. அதுதான் நான் சொல்ல வந்தது" என்றான்.

இதைக் கேட்டதும் ராயர் திடுக்கிட்டு, "ஓகோ! ராமா! என்னை ஏய்த்தாயே! நான் பேச்சில் மாட்டிக் கொண்டேனே" என்று சொல்லி, அவனுடைய சமயோசித புத்தியை மெச்சி, அவன் மைத்துனனை விடுவிக்கும்படி உத்தரவு கொடுத்தார்.

## மூன்றாம் அத்தியாயம்

### ராமன் குளிர் காய்ந்தது

ஒருநாள் ராமன் தன் குதிரைமீது ஏறி, அயலூருக்குச் சென்றான். வழியில் மழை பிடித்துக்கொள்ள, அவன் முற்ற நனைந்துபோனான். அஸ்தமிக்கிற ஸமயத்திற்கு இவன் ஓர் ஊர் போய்ச் சேர்ந்து, ஒரு சத்திரத்தில் நுழைந்தான். அவனுக்குக் குளிரெடுத்துப் போய்விட்டதால், அதிக ஆவலுடன் கணப்பண்டை குளிர்காயப் போனான். ஆங்குப் பலர் அக் கணப்பைச் சூழ்ந்துகொண்டு, மற்றவருக்கு இடமில்லாமல் நெருங்கி உட்கார்ந்திருந்தனர். தென்னாலி ராமன் அவர்களை அவ்விடத்தை விட்டு அகற்றக் கருதி, அவர்கள் கேட்கும்படி சத்திர யஜமானனை உரத்த குரலோடு கூவி அழைத்து, "ஓ! மணியக்காரரே! என் குதிரைக்குச் சிறிது ஆட்டு மாம்ஸம் போடும். அது நெடுந்தூரம் பிரயாணத்தால் களைத்து வந்திருக்கிறது" என்றான்.

மணியக்காரன், "குதிரை சாகபக்ஷிணி யாயிற்றே! மாம்ஸம் உண்ணுமோ?" என்றான். ராமன், "என் குதிரையை நீர் பார்த்திருந்தாலன்றோ தெரியும். நான் சொல்லியபடி செய்யும்" என்றனன். அவன், "இஃதென்ன அதிசயம்!" என்று சிறிது பரிஹாஸத்தோடு வெளியே செல்ல, கணப்பண்டை உட்கார்ந்திருந்தவர்களும் விநோதம் பார்க்க வெளியே ஓடினார்கள்.

ராமன் கணப்பை அணுகி, சுகமாக வேஷ்டி முதலியவற்றைக் காயவைத்துத் தானும் குளிர் காய்ந்து கொண்டிருக்கையில், மணியக்காரன் திரும்பி வந்து, "என்ன ஐயா! பெரும் புரளி செய்து விட்டீரே!" என்றான். தென்

னுலி ராமன், ''என் காரியம் ஆய்விட்டது. என் குதிரை இனி எதைத் தின்னுலென்ன'' என்ருன். அப்பொழுது தான் அவர்களுக்கு வந்தவன், தென்னுலி ராமனென்று தெரியவந்தது.

## நான்காம் அத்தியாயம்

### ராமன் குதிரைப் பந்தயம் போட்டது

ஒருநாள் இராயரின் ராணுவத்தைச் சேர்ந்த ஒரு வீரன், ஓ ராற்றின் பாலத்தின்மீதே தன்னுடைய சிறந்த குதிரையின்மேல் ஸவாரி செய்துகொண்டு போனுன். அப்பொழுது தென்னுலி ராமன் ஒரு சோணிக் குதிரையின்மீது ஏறி எதிரே வந்தான். அந்த ராணுவ வீரன் ராமனைப் பார்த்து நகைத்து, ''உன் குதி[illegible]தம் போம் காதவழி'' என்ருன்.

விகடன், ''ஆ! அப்படி எண்ணிவிட்டையா என் குதிரையை! அது செய்கிறபடி உன் குதிரை செய்யாமற் போனுல் என்ன கொடுப்பாய்?'' என்ருன். வீரன், ''நூறு வராகன் கொடுப்பேன், நீ என்ன கொடுப்பாய்?'' என்ருன். ராமன், ''நானும் அவ்வளவு கொடுப்பேன்'' என்று, தன் குதிரையைப் பாலத்தின்மீதிருந்து ஆற்றில் தள்ளினுன்; அது, கைகால்களே உதறிக்கொண்டு விழுந்து, இறந்தது. வீரன் திடுக்கிட்டு, தன் சிறந்த குதிரையை அவ்வாறு செய்ய மனமில்லாமல் வராகன் நூறையும் எண்ணிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

# ஐந்தாம் அத்தியாயம்

## ராமன் செப்படி வித்தைக்காரனை ஏமாற்றியது

ஒருநாள் ராயரிடத்தில் ஒரு செப்படி வித்தைக்காரன் வந்து, வித்தை காட்டி, ராயரை மகிழ்வித்தான். அவர் அவனுக்குச் சிறந்த பீதாம்பரம் ஒன்று கொடுக்கப்போனார். ஆனால் அவ் வித்தைக்காரன் முதலிலே தென்னாலி ராமனுக்கு மரியாதை செய்யாமையால், ராமன் அவனை அவமானம் செய்யக் கருதி, "ஓ! வித்தைக்காரா! இவ்வளவு அதிசய வித்தைகளைக் காட்டினாயே; நான் கண்ணை மூடிக்கொண்டு செய்கிற காரியத்தை நீ திறந்துகொண்டு செய்வாயா?" என்றான். வித்தையாடி ராயர் சவிகை இருக்கிற தைரியத்தால் கர்வத்தோடு, "நான் அப்படிச் செய்யா விட்டால், இன்று எனக்குக் கிடைக்கப்போகிற ஸம்மானத்தை உமக்குக் கொடுத்து விடுகிறேன்" என்றான்.

உடனே ராமன் நடு வாசலுக்கு வந்து, வித்தைக்காரன்போல் கை கால்களைச் சுழற்றி ஜாலம் செய்து, ஒருபிடி மண்ணை எடுத்துக் கண்களை மூடிக்கொண்டு, அவற்றின் மேல் சொரிந்துகொண்டான். பிறகு மண்ணைத் துடைத்துவிட்டுக் கண் விழித்து, "ஓ! வித்தையாடி! எங்கே நான் செய்ததைக் கண்ணைத் திறந்துகொண்டு செய் பார்ப்போம்" என்றான்.

வித்தைக்காரன் திடுக்கிட்டு விழிக்க, இராயர் முதலானோர் குலுங்க நகைத்தனர். உடனே வித்தைக்காரன் ஸம்மானம் முழுவதையும் ராமன் பெற்றுப்போனான்.

## ஆறாம் அத்தியாயம்

**ராமன் தன் பூனையைக் கொன்ற பழிக்குப் பழி வாங்கியது**

ஒருநாள் தென்னாலிராமனது பூனை அடுத்த தெருவிலுள்ள ஒருவனது கிளியைக் கொன்றமைபற்றி, அவன் அப்பூனையைக்கொன்றுவிட்டான். ராமன் அப்பூனையிடத்து விசுவாசமுடையவனாதலால், அடுத்த தெருக்காரனை இந்த துஷ்டச் செய்கைக்காகத் தண்டிக்க எண்ணங்கொண்டான்; அதற்காக, எலிப்பொறி ஒன்று ஸம்பாதித்து வந்து, உயிரோடு இருபது முப்பது எலிகள் ஆணும் பெண்ணுமாகப் பிடித்து, அவற்றை ஓர் அழகிய பெட்டியிற் போட்டு மேலே விலாசம் எழுதி, அப்பெட்டியைத் தபால் மூலமாகப் பூனையைக் கொன்றவனுக்கு அனுப்பிவிட்டான்.

அவன் பெட்டியை வாங்கி என்னவென்று திறந்ததும், உள்ளேயிருந்த இருபது முப்பது எலிகளும் வெளியே பாய்ந்து மூலைக்கொன்றாய் ஒளிந்துகொண்டன. சில பாய்ந்த வேகத்தால் அவன் கைகளில் பீறியும் விட்டன. அவன் திடுக்கிட்டுத் திகைத்துப் போனான். சிறிது பொறுத்து, இப்பெட்டியை அனுப்பியவன் யாராகவிருக்கலாமென்று அவன் சோதிக்கையில், அப்பெட்டியின் அடியில் ஒரு சிறு நறுக்கில், "என் பூனையை நீ கொன்றுவிட்டாய்; அதனால், என் எலிகளிற் சிலவற்றை உனக்கு இனாம் அனுப்பியிருக்கிறேன், பெற்றுக்கொள்க" என்றெழுதியிருந்தது. அவன், "ஐயோ! நாம் ஏன் தென்னாலி ராமனிடத்தில் சேஷ்டை செய்தோம்" என்று நினைத்துத் தன்னையே வெறுத்துக்கொண்டிருந்தான்.

## ஏழாம் அத்தியாயம்

### ராமன் மூப்பினால் சாவு வேண்டுமென்றது

ஒருநாள் ராயர் ஸபையில், தெனாலி ராமன் விகடம் செய்து கொண்டிருக்கையில், ராயர் கோபிக்கும்படி அவரைப் பரிஹாஸம் செய்துவிட்டான். அதனால் அவர் அவனுக்கு மரண தண்டனை விதித்தார். ராமன் அவர் பாதத்



தில் விழுந்து கெஞ்ச, ராயர், "உனக்கு மரண தண்டனை விதித்தது விதித்ததுதான். ஆனால் எந்த மூலமாக உனக்கு உயிர்போக இஷ்டமோ அதைச் சொல்லு. அப்படியே போகும்படி செய்கிறேன்" என்றார்.

ராமன், "மகாப்பிரபோ! மூப்பின் மூலமாக என்னுயிர் போகும்படி அனுக்ரஹிக்கவேண்டும். இந்த ஒரு வாத்தை மட்டும் கொடுத்தால் போதும்" என்றான்.

ராயர் இச் சொல்லுக்கு அதிசயித்துக் கோபமாறிக் குலுங்க நகைத்து, தண்டனையை மன்னித்து விட்டார்.

## எட்டாம் அத்தியாயம்

### ராமன் தூக்குத் தண்டனைக்குத் தப்பியது

ராயருக்குப் பகையரசனான டில்லி பாக்ஷாவின் ஒற்றன் ஒருவன், மாறு வேஷத்துடன் வந்து யாரோ ஒரு வழிப்போக்கன் போலத் தென்னாலி ராமன் வீட்டில் சோறுண்டான். அந்த விஷயம் பிறகு வெளிப்பட்டுவிட, ராயர் கடுஞ் சினங்கொண்டு, ராமனைத் தூக்கிடும்படி ஆஜ்ஞாபித்தார். ராமன், வந்தவன் பாக்ஷாவின் ஒற்றனென்று தனக்குத் தெரியாதெனவும், யாரோ ஒருவன் பசியென்று வந்தமையால், தான் இரங்கி அன்னமளித்ததாகவும் சொல்லித் தன்னை ரக்ஷிக்கும்படி வேண்டினான். ராயர் சிறிதும் இரங்காமல் ஒரேபிடியாக அவனைக் கொன்றுவிட வேண்டுமென்றார்.

கொலைஞர் அவனைப் பிடித்து இழுத்துப் போய்க் கொலைக்களத்தில் நிறுத்தித் தூக்கிடப்போகும் ஸமயத்தில், அவன் மிகவும் தாகமாக இருக்கிறதென்று கொஞ்சம் வெந்நீர் கேட்டான். சாகிற சமயத்தில் கேட்கிறானே என்று ஒரு கிண்ணத்தில் வெந்நீர் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

அவன் தன் எதிரே வீற்றிருந்த ராயரை நோக்கி, "மகாப் பிரபோ! இதை நான் குடிக்கிறவரையில் என்னைக் கொல்லாமல் வைத்திருக்க வேண்டும்" என்றான். ராயர், "அதற்கென்ன? நீ அதைக் குடித்த பிறகே உன்னைத் தூக்கிட உத்தரவளிப்போம்" என்றனர்.

உடனே ராமன் தன் கைக் கிண்ணத்தைத் தவற விடுவான் போலப் பூமியிலே போட்டுவிட்டு, "ஹே! ராஜன்! இந்த நீரைப் பூமி குடித்துவிட்டதே! எனக்கொன்று மில்லாமற் போயிற்றே" என்றான்.

ராயர் அவனுடைய தந்திரத்தை மெச்சி, அவனை விடுவித்தார்.

## ஒன்பதாம் அத்தியாயம்

### ராமன் ரணகளத்தில் பராக்ரமம் காட்டியது

கதைக்கொத்து இரண்டாம் மலரிலே முப்பத்தேழாங் கதையிலே க்ஷயரோகி ஒருவனை வெட்டிய முரட்டுத் துருக்கனால் டில்லி பாக்ஷாவின் மந்திரியை அப்பாஜி கொல்வித்தா னென்று கூறினோம். அப்பொழுது அப்பாஜியின் ராணுவ வீரர்கள் மிக்க பராக்ரமங்காட்டி எதிரியை வென்றார்கள். அச் சண்டை முடிந்தபிறகு அவ்வீரர்கள் ஓரிரவு நிலவு வெளிச்சத்தில் உட்கார்ந்து கொண்டு, தாம் தாம் செய்த வீரச்செயல்களை எடுத்துப் பெருமை பாராட்டிக்கொண் டிருந்தார்கள்.

அங்கே தென்னுலி ராமன் போய், "நீங்கள் என்ன அதிசயத்தைச் செய்து விட்டீர்கள்? நான் செய்த வீரச் செயலே வீரமாகும்" என்றான். எல்லாரும் வெகு ஆவலோடு அவன் செய்ததைச் சொல்லும்படி கேட்டார்கள். ராமன், வெகு ஆடம்பரத்துடன் இருமிக் கனைத்துக் கொண்டு, "கேளீர் என் ஸகோதர வீரர்களே! சண்டை துவக்கமான தினத்தில் இரவு நடுச்சாமத்தில் எதிரிகள் என்ன செய்துகொண்டிருக்கிறார்களென்று ஒற்றறிய உருவிய வாளுடன் மெல்ல அவர்கள் தண்டிறங்கி யிருந்த விடம் சென்றேன். வழியில் ஒருவன் படுத்துக்கொண்டிருக்கக் கண்டு மெல்ல அருகிற் சென்று பார்த்தேன். அவன் பாக்ஷாவின் வீரனென்று தெரிந்தது. அந்த ஸமயம் நிமிஷம் தாமதிக்கலாமா? உடனே அம்புபோல் பாய்ந்தேன். அத் துருக்கனது வலக்காலை அரைநொடியில் வெட்டிப் போட்டுத் திரும்பிப் பாராமல் ஓடிவந்து விட்டேன். இந்த மாதிரி நீங்கள் செய்வீர்களா?" என்றான்.

எல்லாரும் குலுங்க நகைத்தார்கள். அவர்களுள் ஒருவன், "அட ராமா! அவன் தலையை யேன் வெட்டப்படாது? உனக்குக் கால்தானா அகப்பட்டது?" என்றான். அதற்குத் தென்னுலி ராமன், அகப்பட்டால் அதை விட்டுவிட்டா வந்திருப்பேன்? நன்றா யிருக்கிறது. எனக்கு முன்னே யாரோ ஒரு துஷ்டப் பயல் அதை வெட்டிப் போட்டிருந்தான்" என்றான். எல்லாரும் "வெகு நேர்த்தி! வெகு நேர்த்தி" என்று ஆரவாரித்தார்கள்.

## பத்தாம் அத்தியாயம்

### ராமன் கிரகதானம் செய்தது

ஒருநாள் ராயர் ராமனை நோக்கி, "ஓ! ராமா! செல்வ முடையவர்கள் தான தருமங்கள் செய்யவேண்டும். இல்லா விட்டால், செல்வ முடைமைக்குப் பெருமையில்லை" என்றார்.

ராமன், "இனித் தானம் செய்கிறேன்" என்று ராய ரிடத்தில் சொல்லிவிட்டு, ஒரு சிறந்த மாளிகை கட்டி, அதன் வாசலில், "தனக்குள்ளவற்றைக் கொண்டு திருப்தி யடையும் சத் புருஷனுக்கு இவ்வீடு தானம் செய்யப்படும்" என்று எழுதி ஒட்டியிருந்தான்.

நெடுநாள் வரையில் ஒருவனும், "நான் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைகிறவன்" என்று சொல்லிக்கொண்டு ராமனிடத்தில் வந்து வீட்டைக் கேட்கவில்லை. ஒருநாள் ஒருவன் வந்து, "ராமா! நான் கிடைத்ததைக் கொண்டு ஸந்துஷ்டியடைபவன். அதை நீ எப்படி வேண்டுமென்றா லும் சோதித்துக் கொள்ளலாம்; நீ எனக்கு இவ்வீட்டைத் தானம் செய்" என்றான்.

உடனே தென்னாலி ராமன், "ஆ! நீர் உள்ளதைக் கொண்டு திருப்தியடைபவரா யிருந்தால், இவ்வீட்டை யேன் கேட்கிறீர்? இதை நீர் கேட்கிறதைக் கொண்டே உமக்கு இப்போது உள்ளத்தில் ஸந்துஷ்டி பிறக்கவில்லை யென்பது ப்ரத்தியக்ஷமாகத் தெரிகிறதே" என்றான். அவன் வெட்கிப் போய்ச் சேர்ந்தான். அவனைப் போல வேறு எவன் வந்து அவ்வீட்டைக் கேட்டாலும் உள்

ளதைக்கொண்டு திருப்தியடையாமை வெளிப்பட்டதால், எவருக்கும் அவ்வீடு கிடைக்கவில்லை. ஆதலால், ராமனே அதை ஆண்டனுபவித்து வந்தான்.

## பதினொன்றும் அத்தியாயம்

### ராமன் புரோகிதரை ஏமாற்றியது

ஒருநாள் தென்னலி ராமன் சுரங் கண்டு, பிழைக்க மாட்டான்போலத் தோன்றினன். அப்பொழுது அவனுக்குப் பிராயச்சித்தம் செய்யப் புரோகிதரை அவன் புத்திரன் இட்டுவந்தான். அவர் தென்னலி ராமன் பணக்காரனென்று, பிராயச்சித்தம் செய்துவைக்க நூறு வராகன் கேட்டார். ராமன் மகன், "ஐயோ! அவ்வளவு தொகைக்கு நான் எங்கே போவேன்?" என்று பாசாங்கு செய்தான்.

புரோகிதர், "இதோ உன் தகப்பனுடைய குதிரை இருக்கிறதே அதை விற்று, எனக்குத் தக்ஷிணை கொடுக்கக் கூடாதோ?" என்ருர். ராமன் மகன் எப்படியாவது புரோகிதரை ஸமாதானப் படுத்தவேண்டு மென்று "வேதியரே! நாளைச் சந்தையில் அக்குதிரைக்கு என்ன விலை வருகிறதோ அதை உமக்குத் தந்து விடுகிறேன்" என்ருன்.

புரோகிதர் பிராயச்சித்தத்தை முடித்துவிட்டு, வீடு சென்ருர். நல்ல வேளையாக, தக்க ஔஷதத்தாலும், ஆயுர்பலத்தாலும் ராமன் பிழைத்தெழுந்தான். நல்ல பலம் வந்ததும், அவன் மகன் புரோகிதரின் தக்ஷிணை

யைப் பற்றிக் கூற, ராமன் நல்லதென்று, தன் குதிரை யுடனும் வழியோடு சென்ற ஒரு பூனைக்குட்டியுடனும் சந்தைக்குப் போனான்.

அங்கே வந்த ஒரு தனிகர், ராமன் குதிரையின் நேர்த்தியைக் கண்டு, விலை விசாரித்தனர். அவன், ஐயா! இதன் விலை கால்வராகன்" என்றான். "ஆ, என்ன பரிகாசம் செய்கிறாயா? உண்மையாய் இதன் விலை யென்ன என்றார். ராமன், "ஐயா! நான் விளையாட்டுக்குச் சொல்லவில்லை. அதன் விலை கால்வராகன்தான்; ஆனால் இந்தப் பூனைக்குட்டியையும் நீர் வாங்கிப்போக வேண்டும். அதன்விலை நூறு வராகன்" என்றான். பிரபு நூறேகால் வராகனையும் எண்ணிக் கொடுத்துவிட்டு, இரண்டையும் பிடித்துக்கொண்டு போய்விட்டார். பக்கத்தில் தக்ஷிணைக் காகக் காத்துக்கொண்டிருந்த புரோகிதர், குதிரையின் விலையான கால்வராகனைப் பெற்று "ராமன் நம்மை ஏமாற்றினானே" என்று வைதுகொண்டு வீடுபோய்ச் சேர்ந்தார்.

## பன்னிரண்டாம் அத்தியாயம்

### ராமன் ராயர் கடனைத் தீர்த்தது

தென்னாலி ராமன் ராயரிடத்தில் முந்நூறு வராகன் கடன் வாங்கியிருந்தான். அதைக் கொடுத்துவிடும்படி அவனை அவர் பலதரம் கேட்டார். அவன் நாளையாகட்டும், மறுநாளாகட்டும், பின்னையாகட்டும் என்று சொல்லி வந்தான். ராயர் அவனைக் கடனுக்காக நெருக்க ஆரம்பித்தார். அவன் அவரிடத்தினின்றும் விடுதலை அடைய ஓர் உபாயம் பண்ணினான்.

ஒருநாள் ராயர் தெனலி ராமன் வீட்டு வாசல் வழி யாய்ப் பவனி செல்கையில், அவ்விகடனது மனைவியும், மகனும், "ஐயாவே! அப்பாவே! போனீரோ!" என்று தலைவிரிகோலமாக மார்பி லடித்துக்கொண்டு, வாசலில் வந்து விழுந்தார்கள். ராயர் என்ன சங்கதி யென்று விசாரிக்க, பக்கத்தில் நின்றவர்கள் ஒரு பாடையைக் காட்டி, "தெனலி ராமன் இறந்துவிட்டான்" என்றனர். ராயர் பாடையருகில் சென்று முழுமையும் முக்காடிட்டு விறைத்த படிக் கிடந்த சவத்தை நோக்கி, "ஐயோ! நமது ஸமஸ்தானத்திற்கு இவன் மரணத்தை ஒரு நஷ்டமென்றே சொல்ல வேண்டும். இவன் நமக்கு முந்நூறு வராகன் கொடுக்க வேண்டும். போகிறான் பயல்; நம்மை யடுத்தவன் பிழைத்துப் போகட்டும். ருணபந்தம் பொல்லாது. அந்தப் பணத்தை அவனுக்கு நாம் தானங் கொடுத்ததாக இருக்கட்டும். நாம் மனமாற அதைத் தள்ளிப் போட்டோம்" என்றார்.

இச்சொல் அவர் வாயினின்றும் வந்ததோ இல்லையோ, பாடையிற் கிடந்த பிணம், போர்வையை யெல்லாம் வீசி யெறிந்து போட்டு, "குபீ" ரென்று எழுந்து ராயர் பாதத்தில் நமஸ்கரித்தது. ராயர் திடுக்கிட்டு நிற்க, தெனலி ராமன், "பிரபோ! அடியேன் தேவரீர் கடனைக் கொடுக்கக் கூடவில்லையே என்னும் ஏக்கத்தால் உடல் மெலிந்து, இறந்துபோனேன். இப்பொழுது நீங்கள் அந்த ருணபந்தத்தினின்றும் என்னை விடுவித்தமையாலும், 'பயல் பிழைத்துப் போகட்டும்' என்று அநுக்ரகித்தமையாலும் நான் பிழைத் தெழுந்தேன்" என்றான். ராயர் முதலிய எல்லாரும் குலுங்க நகைத்து, அவன் தந்திரத்தை மெச்சினார்கள்.

## பதின்மூன்றும் அத்தியாயம்

### ராமன் டில்லி பாக்ஷாவினிடத்து ஸம்மானம் பெற்றது

ராயரிடத்துத் தென்னலி ராமன் என்று ஒரு சிறந்த விகடன் இருக்கிறன் என்று டில்லி பாக்ஷா கேள்வியுற்று, அவனைத் தனது ஸபைக்கு அனுப்பும்படி ராயருக்கு அப் பாக்ஷா தாக்கீது அனுப்பினன். ராயர் ராமனை ஜாக்ரதை யாயிருந்து வரும்படி திட்டம் செய்து அனுப்பினர்.

தென்னலி ராமன் பாக்ஷாவின் ஸபையில் பலப்பல விதமான ஆஸ்யங்கள் செய்துவந்தான். ஆனல் பாக்ஷா ராமனுடைய விகடங்களுக்கு ஒருவரும் சிரிக்கக் கூடா தென்றும், அப்படிச் சிரித்துவிட்டால், அவர்களுடைய தலை வெட்டப்படும் என்றும் முன்னதாகவே உத்தரவு செய்திருந்தமையால், அவன் ஸபையோர் எல்லாரும் தமக்கு என்ன சிரிப்பு வந்தபோதிலும் ராஜாஜ்ஞைக்கு அஞ்சி, சும்மா இருந்துவிட்டனர். மேலும் எவனுடைய காரியத்தை மெச்சி பாக்ஷா ஸந்தோஷம் காட்டுகிறனே, அவனுக்கு ஐந்நூறு பொன் கொடுப்பது அவன் ஸமஸ்தானத்து வழக்கம்.

இந்தச் செய்தி ராமனுக்குத் தெரிந்தது. "பாக்ஷா நம்மை ஸம்மான மில்லாமல் அவமானப்படுத்தி, ஊருக்கு அனுப்பவல்லவா இந்த உபாயம் செய்கிறன்" என்று கண்டு, ஒரு தந்திரம் பண்ணினன். ஒருநாள் பாக்ஷா வேட்டைக்குப் போயிருந்து திரும்பிவரும் வழியில், மிக்க வயது சென்ற கிழவனைப்போல் வேஷந் தரித்து ஒரு புளியங் கொட்டையை மண்ணில்போட்டுப் பாக்ஷா பார்க்கும்படி நீரூற்றிக்கொண்டிருந்தான். பாக்ஷா அவனை, அணுகிய

தும், "என்ன கிழவரே! நீரூற்றிக்கொண்டிருக்கிறீரே?" என்று கேட்க, பொய்க் கிழவன், "பிரபோ! புளியங்கொட்டை போட்டிருக்கிறேன். அதற்கு நீர் வார்த்தேன்" என்றான்.

பாக்ஷா, "ஆ கிழவா! புளியமரம் வளர்ந்து காய்க்கிற வரையில் நீ உயிருட னிருக்கப்போகிறாயா?" என்றான்.

கிழவன், "மகாராஜ்! உலகத்தில் மனிதர்கள் தமக்கென்று ஒன்றையும் செய்யக்கூடாது. இதோ பக்கத்தில் நிற்கிற மரம் யார் நட்டதோ, யார் பயிராக்கியதோ? அதன் பழத்தை நாம் அனுபவித்து, மரம் வைத்தபேரை வாழ்த்தி வருகிறோம். அப்படித்தான் நாமும் நமது பின் ஸந்ததிக்காக நட்டு வைத்தோமானால், அவர்களும் அதன் பயனை அடைந்து, நம்மை வாழ்த்துவார்கள், பரோபகாரிகளாய் வாழும் வாழ்க்கையே உத்தம வாழ்க்கை" என்றான்.

பாக்ஷா, "ஆ! ஆ! நன்று சொன்னீர்! நன்று சொன்னீர்!" என்றான். அவன் ஸமஸ்தானத்து வழக்கப்படி, பக்கத்தில் நின்றவன் ஐந்நூறு பொன் கட்டிய ஒரு பையை அக்கிழவனுக்குக் கொடுத்தான். உடனே கிழவன், "ஓ பூபதி! எல்லார் மரமும் வைத்துப் பல வருஷங்கள் சென்ற பிறகு பலனைக் கொடுக்கும். என் மரமோ கொட்டைபோட்டவுடன் பயனை ஈந்தது" என்றான். பாக்ஷா, "நிரம்ப புத்திமான்! நிரம்ப புத்திமான்!" என்று அட்டஹாஸம் செய்தான். உடனே மற்றொரு பொற்பை அக்கிழவன் கையில் விழுந்தது. கிழவன் பின்னும், "ஹா! ஹா! என்ன அதிசயம்! என்ன அதிசயம்! எல்லா மரங்களும் வருஷம் ஒன்றுக்கு ஒரு தரமே பயனைத் தரும்; என்னுடையதோ ஒரே நாளில் இரண்டு பயனைத் தந்தது!" என்றான். பாக்ஷா

குலுங்க நகைத்து, "ஓ! கிழவனுரே! உம்மை ஒத்த புத்திமானில்லே!" என்ருன். உடனே மூன்ருவது பொற்பையும் அவனுக்கு வந்து சேர்ந்தது.

பாஷா, "அப்பா? இக் கிழவனுரின் அருகு இருக்கக்கூடாது, இவர் நமது பொக்கிஷசாலேயை வெறும்சாலேயாக்கிவிடுவர்" என்று சொல்லிவிட்டுத் திரும்புகையில், ராமன் தன் வேஷத்தைச் சரேலென்று கலேத்தான். உடனே பாஷா, "அடா ராமா! நீயா இந்தக் கூத்துச் செய்தது? உன்னே வைத்துக்கொண்டிருக்கிற ராயரே பாக்கியவான்" என்று, குதிரையினின்றும் குதித்து வந்து, அவனேத் தழுவிக்கொண்டான்.

பிறகு ராமன் சிலநாள் பாஷாவின் ஸபையில் அதிவிநோதமான விகடங்களேச் செய்து, பெருத்த ஐச்வரியவானுய் ராயர் நாட்டுக்குத் திரும்பினுன்.

## பதினுன்காம் அத்தியாயம்

### ராமன் பரண்மேலிருந்த திருடனேப் பிடித்தது

ஒருநாள் தென்னுலி ராமன் சாப்பிட்டுவிட்டு, சிரமபரிகாரமாகப் படுத்திருக்கையில், பரண்மேல் ஒரு திருடன் ஒளிந்திருப்பதைக் கண்டான். அவனே அச்சமயம் பாராததுபோலவிருந்து, பிறகு தன் மனேவிக்கு ஜாடை காட்டினுன். அவளும் புத்திசாலியாகையால், ஜாடையை அறிந்துகொண்டு, அருகில் வந்து உட்கார்ந்து, உல்லாஸமாகப் பேச ஆரம்பித்தாள். ராமன், "அடி! உன் வயிற்றுக் குழந்தை ஆணுகப் பிறந்தால், யார் பேரிடலாம்?"

என்ருன். அவள், "உமக்கு எப்படி மனதோ அப்படிச் செய்யுங்கள்" என்ருள். ராமன், நமக்குக் குலதெய்வம் திருப்பதி வெங்கடாசலப் பெருமாள்தான், வெங்கடா சலம் என்று பேர் வைத்து, இப்படி அழைப்பேன்" என்று சொல்லி "அடே! வெங்கடாசலம், அடே! வெங்கடாச லம்!" என்று உரக்கக் கூப்பிட்டான். அது அண்டை வீட்டுத் தலேயாரியின் பேராகையால், அவன், "என்ன?" என்று ஓடிவந்தான். ராமன், "உன்னே எங்கடா நான் கூப்பிட்டேன்? எனக்கு மகன் பிறந்தால் இப்படிக் கூப் பிடுவேன் என்று கூப்பிட்டுப் பார்த்தேன். நான் சொல் வது உண்மையா இல்லேயா என்று அதோ பொது மனுஷ்ய னிருக்கிருன்; அவனேக் கேட்டுப்பார்" என்று பாண்மே லிருந்த திருடனேச் சுட்டிக் காட்டினுன். அவன், "அப் படியா" என்று, திருடனேக் கட்டிப் பிடித்துக்கொண்டு சிறைச்சாலேக்கு இழுத்துச் சென்ருன்.

## பதினேந்தாம் அத்தியாயம்

### ராமன் கத்தரிக்காய் திருடித் தப்பிக்கொண்டது

ஒருவனுக்குக் கொல்லே நிறையக் கத்தரிக்காய் காய்த் திருந்தது. ஒருநாள் தென்னுலி ராமன் அவனேக் கொஞ் சம் கத்தரிக்காய் கேட்டான். அவன் மிகவும் கிருபண னுகையால், இல்லேயே என்று கைவிரித்து விட்டான். ரா மன் நல்லது என்று சும்மா போய், அன்றிரவு அவனறி யாமல் அவன் கொல்லேயி லுள்ள காயனேத்தையும் பறித்து வந்து, மனேவி கையில் கொடுத்துச் சமைக்கும்படி சொன் னுன். அவள் சமைத்ததும், "அடி, நாம் இருவருமே

இக்கறியைத் தின்றுவிடுவோம். மகனுக்கு வேண்டாம்" என்ருன். அவள், "என்ன பேச்சுப் பேசுகிறீர்? குழந்தைக்கு வஞ்சகம் பண்ணலாமா?" என்ருள்.

ராமன், "ஸரி, ஒருபாயம் பண்ணு, அவன் மேலே தண்ணீரைத்தெளித்துக் கொண்டே,'மழை! மழை! எழுந்திரு' என்று சொல்லி எழுப்பி, அழைத்து வந்து கறி போடு" என்ருன். அவள் அப்படியே செய்தாள்.

மறுநாள் கொல்லைக்காரன் கொல்லையில் ஒரு பிஞ்சு கூட விடாமல் பறித்திருக்கக் கண்டு, ராமன் மேல் ஸந்தேகப்பட்டு, விளையாடுகிற அவன் பிள்ளையைக் கூப்பிட்டு, "பையா! ராத்திரி உங்களகத்தில் என்ன கறி?" என்ருன். அவன், "கத்தரிக்காய்க் கறி" என்றதும், அதைச் சாக்ஷியாக வைத்துக்கொண்டு, ராயரிடத்தில் வழக்கிட்டான். அவர் ராமனையும் அவன் மனைவியையும்பிடித்து வரச்சொல்லி, "ராத்திரி கத்தரிக்காய் சமைத்தீர்களா?" என்ருர். அவர்கள், "இல்லையே" என்ருர்கள். "உங்கள் பிள்ளை சொல்லுகிருனே" என்று ராயர் கேட்க, அவர்கள், "என்றைக்குச் சாப்பிட்டதைச் சொல்லுகிருனே? செவ்வையாக விசாரியுங்கள். திருடப் போயும் கத்தரிக்காயையா திருடவேண்டும்; ஒரு துட்டுக் கொடுத்தால், ஒரு கூடை கிடைக்கிறது" என்ருர்கள்.

ராயர், ராமன் பிள்ளையை, "எப்போது சாப்பிட்டாயப்பா?" என்று கேட்டார். அவன், "ராத்திரி மழை பெய்ததே அப்போது சாப்பிட்டேன்" என்ருன். கேட்ட ராயர், கொல்லைக்காரனை நோக்கி "ராத்தி மழை யில்லையே; இச்சிறுவன் மழை பெய்த காலத்தில் எப்பொழுது சாப்பிட்

டானே? அதைச் சொல்லுகிருன். உனக்கு வேறு சாக்ஷி உண்டானுல் சொல்லு. இப்பிள்ளையின் சாக்ஷி உபயோக மில்லை'' என்று, வழக்கைத் தள்ளிவிட்டார். வழக்காளி அவமானமுற்றுப் போனுன்.

## பதினுரும் அத்தியாயம்

### ராமன் பேய்களை எண்ணெயாகக் கொண்டுவா என்றது

ஒருநாள் தென்னுலி ராமன் தன் வீட்டுக் கொல்லை யில் காயாமல் வீண் நிழல் செய்துகொண்டிருந்த ஒரு புளிய மரத்தை வெட்டப் போனுன். அவன் கருத்தை அறிந்த அந்த மரத்திலிருந்த பேய்களில் சில, அவனிடத் திற்கு வந்து, ''ஐயா! இதை ஏன் வெட்டுகிறீர்?'' என்றன. ராமன், இதில் ஏதோ காரியமிருக்கின்றதென்று, ''ஓ பேய்களா! நீங்கள் இம்மரத்தைவிட்டுப் போய்விட வேண் டும். நான் இம்மரத்தை வெட்டி, இக்கொல்லையை எள்ளு விதைக்கும்படி செப்பம் செய்யப் போகிறேன்'' என்ருன்.

அவை, ''ஐயா! உமக்குப் பிரயாஸையின்றி வருஷந் தோறும் நூறு கல எள்ளுக் கொடுத்துக்கொண்டு வந்தால் இதை வெட்டாது விடுவீரன்ருே?'' என்றன. ராமன் 'ஸரி, பார்ப்போம். நீங்கள் நல்ல எள்ளாய்க் கொண்டுவர வேண்டும்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். அந்த வருஷம் முதல் வருஷந்தோறும் அவனுக்கு நூற்றுக் கல எள்ளு அப்பேய்கள் கொடுத்துக்கொண்டு வந்தன.

அப்படி யிருக்கையில் அப் பேய்களிருந்த மாத்திற்கு ஓர் உறவின்முறைப் பேய் வந்தது. அது இருந்த பேய் களைப் பார்த்து, "ஏன் இன்று விசனமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டது. அவைகள், "நாங்கள் என்ன சொல்லப் போகிறோம்! இந்த ஊரிலிருக்கும் விகடன் தென்னுலி ராம னுக்குத் தினம் தினம் திரிந்து எள்ளுத் திருடி வருவதே எங்களுக்குக் காரியமாகிவிட்டது. அதனால் அலுத்துப் போகிறோம்" என்றன.

இதைக் கேட்ட அந்தப் புதுப்பேய், "நீங்கள் ஓர் அற்ப மனிதனுக்கு அஞ்சுவது வெகு நன்றாயிருக்கிறது! இதோ அவனை நான் கொன்று வருகிறேன், பாருங்கள்" என்று வீரம் பேசிவிட்டுப் புறப்பட்டு, தென்னுலி ராமன் மாட்டுத்தொழுவத்தின் தூண் மறைவில் தெரியாமல் உட் கார்ந்திருந்தது. அப்போது ராமன் சில மாடுகளுக்குச் சூடு போட்டுக்கொண்டிருந்தான். அவன் சில தினங்களு க்குமுன் புதுப்பேய் என்ற ஊரில் ஒரு காளை வாங்கிவந் திருந்தான். அதையும் அவன் சூட நினைத்து, "அடா அந்தப் புதுப்பேயைக் கட்டுங்கள்; சூடு போட்டுவிடு வோம்" என்றான்.

இதைக் கேட்டவுடன் உறவின்முறைப் பேய் தன்னைத் தான் சொல்லுகிறான் என்று பயந்து, நடுங்கி ஒடுங்கி வந்து, ராமன் காலில் விழுந்து, "என்னைச் சூடாதேயும்" என்றது. ராமன் மிக்க கம்பீரமாக, "நீ எங்கே வந்தாய்? சீக்கிரம் சொல்" என்று அதட்ட, அது, "ஐயா இந்த ஊர்ப் பேய் கள் இத்தனை நாளும் போல உங்களுக்கு 'எள்ளாகக் கொ ணர்ந்து கொடுக்கவேண்டுமா, எண்ணெயாகக் கொணர்ந்து கொடுக்கலாமா?' என்று கேட்டுவரச் சொல்லின. அதை அறிந்துபோகும்பொருட்டு வந்தேன்" என்றது.

அவன், "நீயும் கூட இருந்து, இன்று முதல் சுத்த மான எண்ணெயாக நூறு ஆடம் கொண்டுவரவேண்டும்" என்று அதிகாரத்துடன் சொல்ல, அது நல்லதென்று கேட்டுக் கொண்டு போய், ஊர்ப் பேய்களுடனே சொல்லி முறையிட்டது. அவைகள், "அப்பா! இது நீ செய்த உபகாரமா? ஓட மருந்திண்டு உறங்கி விழுந்தாயே" என்று வெறுத்துக்கொண்டு அன்று முதல் அதனுடனே கூட எண்ணெய் கொண்டுவரத் துவக்கின. ராமன் நூறு ஆடம் எண்ணெய் பெற்றுக் களித்திருந்தான்.

## பதினேழாம் அத்தியாயம்

### ராமன் கூனனை யானைக்காலால் இடறுவித்தது

ஒருநாள் தென்னாலிராமன் ஆசியத்திலே பெருங் குற்றம் செய்துவிட ராயர் கோபம் செய்து, அவனை யானையின் காலால் இடறுவிக்கும்படி உத்தரவு செய்தார். ராமன் என்ன கெஞ்சியும் அவர் கேளாமையால், கொலைஞர் அவனைக் கொலைக்களத்திற்கு இழுத்துப்போய், கழுத்து மட்டமாகக் குழிவெட்டி, ராமனை அதில் புதைத்து, அவன் தலையை இடறுவதற்கு யானை கொண்டுவரப் போனார்கள்.

அத்தருணத்தில் அங்கு ஒரு கூனன் வந்தான். அவன் ராமனைப் பார்த்து, "ஏன் தம்பீ, இப்படி இருக்கிறாய்?" என்றான் ராமன். "அப்பா எனக்கு முதுகு கூனி இருந்தது; அதை நிமிர்த்துக்கொள்ளும் பொருட்டு, இந்த உபாயம் செய்தேன்" என்றான்.

கூனன், "நானும் சிறிதுநேரம் உன்னைப் போலப் புதை யுண்டு நிற்கிறேன்" என்றுன். ராமன், "என்னை எடுத்து விடு. பிறகு உன்னைப் புதைக்கிறேன்" என்றுன். அப் படியே கூனன் அவனை வெளியில் எடுத்துவிட ராமன் தன் முதுகை வளைத்துக் காட்டி, "பார்! எனக்கு முதுகு உன் னிலும்கூனி யிருந்தது. இப்பொழுது எப்படியிருக்கிறது?" என்றுன். கூனன் அவன் பேச்சை நம்பி, ஐயோ ? குழி யில் இறங்கினுன்! ராமன் மண்ணைப் பரபர வென்று குழி யில் தூர்த்துப் பலமாகக் கெட்டித்து, "நான் போய் வருகி றேன்" என்று போய்விட்டான்.

சிறிது நேரத்திற்குள் யானையுடன் கொலைஞர் வந்து கூனன் தலையை இடறிப் போட்டனர். ராமன் ராயர்முன் வந்து, தண்டம் செய்ய, அவர், "அடா ராமா! எப்படியடா தப்பினுய்?" என்றுர். அவன், "பிரபோ கூனன் ஒருவனை, எனக்குப் பதிலா இடறுவிக்கும்படி ஜாக்ரதைசெய்துவிட்டு வந்தேன். அவனைத் தப்பாமல் இடறுவித் திருப்பார்கள். அவ்விஷயத்தில் உங்களுக்குக் கவலை வேண்டாம்" என் றுன். ராயர் ராமன் தந்திரத்தைக் கேட்டு குலுங்க நகை த்து, அவன் செய்த குற்றத்தை மன்னித்தார்.

## பதினெட்டாம் அத்தியாயம்

### ராமன் தலை வெட்டுக்குத் தப்பியது

மற்ருெரு நாள் ராமன் ராயருடைய கோபத்திற்காளா யினுன். அவர் சேவக ரிருவரை அழைத்து, "இந்த ஸமயத்தில் தப்பாமல் தலையை வெட்டிவிட்டு வாருங்கள்" என்று ஆஞ்ஞாபித்தார். அச் சேவகர்கள் அவனைக் கட்

டிப் பிடித்துக்கொண்டு போகையில், அவன் வெகு நைச்சியமாக அவர்களை வசப்படுத்திக் கொண்டு, "அப்பா! என்னை நீங்கள் விடவோ போகிறதில்லை. நான் தலைவெட்டுண்டு சாவது திண்ணம். ஆயினும் நான் பார்ப்பானுனதால், எங்கள் ஜாதிவழக்கப்படி ஸ்நானம் செய்து, சிறிது நேரம் கடவுளை வந்தனம் செய்தபிறகு என்னைக் கொல்லுங்கள். மேலும் என்னுயிரை ஒரேவெட்டில் நீங்கும்படி இருவரும் சேர்ந்து வெட்டிவிட்டால், ஆயாஸமில்லாமல் இறந்து போவேன்" என்ருன்.

அம் மூடத் துருக்க வீரர்கள் அவன் பேச்சுக்கு இணங்கி, அப்படியே என்று சம்மதித்தனர். ராமன் ஒரு குளத்தில் இறங்கி மார்பளவு ஜலத்தில் நின்றுகொண்டு, "அப்பா வீரர்களே! நான் தலையை அசைப்பேன். அதே க்ஷணத்தில் இருவரும் என்னை வெட்டிவிடவேண்டும்" என்ருன். அவர்கள் ஸரி என்று, எப்பொழுது ராமன் தலை ஆடும் என்று உருவிய வாளுடன் பார்த்திருந்தனர். விகடன் அரை நாழிகைநேரம் கடவுளைத் தியானிப்பான்போல முணுமுணுவென்று என்னவோ ஜபித்துக்கொண்டிருந்து, சட்டெனத் தலையை அசக்கி, இம்மென்னு முன்னே நீரில் மூழ்கிவிட்டான்.

தலை யசைக்கும் தருணம் காத்திருந்த துருக்க ரிருவரும் வாளை வீச, ராமன் நீருள் முழ்கி விட்டமையால் வீசிய வேகத்தால், ஒருவரை ஒருவர் வெட்டிக்கொண்டு இறந்தனர். முழுகிய ராமன் சிறிது அப்பால் போய்த் தலையைத் தூக்கிப் பார்க்க, இரண்டுபேரும் வெட்டுண்டு போனதைக் கண்டு களித்து, ராயரெதிரே போய் நின்ருன். அவர், "அடா பயலே! இப்பொழுதும் எப்படித் தப்பினுய்?" என்ன, அவன் நடந்ததைச் சொன்னுன். ராயர் நகைத்து

"இன்னொரு சமயம் நீ குற்றஞ் செய்தால் என்கையாலேயே உன்னை வெட்டிவிடுவேன்; ஜாக்கிரதை" என்று சொல்லி அந்த ஸமயம் அவனைச் சும்மா அனுப்பிவிட்டார்.

## பத்தொன்பதாம் அத்தியாயம்

### ராமன் பிராமணர்களுக்குச் சூடு போட்டது

இராயருடைய அருமை மாதா இறந்துபோகிற காலத்தில் மாம்பழத்தின்மேல் ஆசையாயிருக்கிறதென்று சொன்னாள். ஆனால் அவர் அதைத் தருவித்துக் கொடுக்குமுன் அவள் இறந்துபோனாள். ராயர், ஐயோ "நமது மாதாவின் ஆசையை நிறைவேற்றக் கூடவில்லையே" என்று துக்கித்து, அந்தணரை அழைப்பித்து, "என் தாயார் மாம்பழத்தின்மீது ஆசையுடனே இறந்துபோனாள். அதற்கு என்ன செய்யலாம்?" என்று கேட்டார். அதற்கு அவர்கள், "தங்கத்தினாலே ஆயிரத்தெட்டு மாம்பழங்கள் செய்து ஆயிரத்தெட்டு பிராம்மணர்களுக்குக் கொடுத்தால், அவள் ஆத்மாவுக்குத் திருப்தியுண்டாகும்" என்றார்கள். ராயர் அப்படியே செய்வித்து, அவள் இறந்த திதியில் தானம் பண்ணினார்.

தென்னாலி ராமன் இதைக் கண்டு, "பார்த்தாயா! இந்தப் பிராம்மணர்கள் நமது அரசனை வஞ்சித்து விட்டார்கள்!" என்று கோபங்கொண்டு, அவர்களுக்குப் புத்தி புகட்ட எண்ணி, அவர்களை ஒருநாள் தன் வீட்டிற்கழைத்துப்போய், "ஐயரே! என் தாயாருக்கு

இன்று திவசம்; ஏதோ அற்பமேனும் நான் கொடுப்பதைத் தயைசெய்து அங்கீகரிக்கவேண்டும்'' என்றான். அவர்கள் அவன் பேச்சைநம்பி, வீட்டுக்குள் நுழைந்தார்கள். உடனே அவன் தெருக் கதவைச் சார்த்திப்போட்டு, அடுப்பிலே காய்ந்துகொண் டிருந்த சூட்டுக் கோலை எடுத்துவந்து, ''ஐயர்களே! என் தாய் இறக்கும்போது வலிப்பு நோயினால் வருந்தி, சூடினால் பிழைப்பே னென்றாள். ஆனால் சூடுவதற்கு முன்னே பரலோக மடைந்தாள். ஆகையால் அவள் ஆத்மா திருப்தியடைய அந்தச் சூட்டை நீங்கள் குளிர்ந்த மனஸோடு வாங்கிக்கொள்ள வேண்டும்'' என்று, எல்லாரையும் சூடிவிட்டான். அவர்கள் அலறிக்கொண்டு ஓடிச்சென்று, ராயரிடத்தில் முறையிட்டார்கள். ராயர் கோபித்து, தென்னாலி ராமனை அழைப்பித்து, ''அடா! பாபி! என்னடா செய்தாய்?'' என்று கேட்டார். அவன், ''பூபதியே! தேவரீர் உம்முடைய தாயார் கேட்டதை இவர்களுக்குக் கொடுத்தாற்போல, என் தாயார் கேட்டதையும் நான் இவர்களுக்குக்கொடுத்து, அவர்களுக்குச் சந்தோஷம் வரப்பண்ணினேன்'' என்றான். ராயர் தாம் மோசம்போனதைக் குறிப்பா லுணர்ந்து, ராமனை மெச்சினார்.

## இருபதாம் அத்தியாயம்

### ராமன் சித்திரம் எழுதியது

ஒருநாள் ராயர் ஒரு சித்திரக்காரனை அழைப்பித்து, தாம் அலங்காரமாகக் கட்டுவித்த மாளிகையில் விநோதமான சித்திரங்கள் எழுதும்படி கட்டளை யிட்டார். அவன் எல்லாம் எழுதிய பிறகு ராயருக்கு அறிவித்தான். ராயர்

அப்பாஜீ முதலானவர்களுடனே போய்ச் சித்திரங்களைப் பார்த்து, ஸந்தோஷித்துத் திரும்பி வருகையில், தென்னலி ராமன் பாதிமுகமாக இருந்த ஒரு சித்திரத்தைப் பார்த்து, "மகாராஜாவே? இதற்கு ஒரு புறத்து அவயவம் மாத்திரமிருக்கிறதே; மற்றப் பாதியும் எங்கே?" என்றான். ராயர் "அஃது அந்தப் பக்கத்தி லிருப்பதாகப் பாவனை. இது உனக்குத் தெரியாதா?" என்று நகைத்தார். ராமன், "இப்பொழுது தெரியவந்தது, நான் கண்டேனா? சொன்னாலன்றோ தெரியும்!" என்று, அப்பொழுதைக்குச் சும்மா இருந்துவிட்டான்.

சில மாதங் கழிந்தன. ஒருநாள் ராமன் ராயரைப் பார்த்து, "நான் நெடுநாளாகச் சித்திரவேலையில் அப்பியாஸம் பண்ணிக்கொண்டு வந்து, இப்போது அதில் கைதேர்ந்திருக்கிறேன்" என்றான். ராயர், "அப்படியானால் உன் திறமையை நாம் பார்க்கவேண்டாமா?" என்றார். ராமன், "யஜமான் உத்தரவுப்படி காத்திருக்கிறேன்" என்றான். அவர் ஸந்தோஷப்பட்டு, தம் அரண்மனையின் ஒரு பாகத்தில் எழுதியிருந்த சித்திரங்கள் சிறிது மங்கலாயிருந்தமையால், அவைகளை யெல்லாம் துடைத்துப் போட்டு, போக்கியமான சித்திரங்கள் எழுதும்படி அவனுக்குத் தாம்பூலம் கொடுத்து, அந்த வீட்டை ஒழித்து விட்டு, தாம் வேறு வீட்டில் குடிபோனார்.

தென்னலி ராமன் முன்னிருந்த அலங்காரமான சித்திரங்களை வீணாகக் கழுவித் துடைத்துவிட்டு, ஓரிடத்தில் ஒரு நகமும், ஓரண்டை ஒரு விரலும், ஓரிடத்து ஒரு கையுமாக வீடு நிறைய எழுதி, விகாரமாக்கிவிட்டு, ராயரண்டை வந்து, "சித்திரங்க ளெல்லாம் எழுதி முடித்துவிட்டேன்.

தாங்கள் வந்து கடாக்ஷிக்கவேண்டும்'' என்றுன். ராயர் ஸந்தோஷத்தோடு வெகுபேருடனே நுழைந்து பார்த்து, "அடா ராமா! இது என்ன? செம்புள்ளி கரும்புள்ளி குத்தியிருக்கிருயே! ஒவ்வோருருப்பு மாத்திரந்தானே யிருக்கின்றது!'' என்ருர். ராமன் "மற்றவையெல்லாம் அந்தப் பக்கத்திலிருப்பதாகப் பாவனை. இப்போது மறந்து போனீர்களோ?'' என்றுன்.

ராயர் "ஒகோ! மோசம் போனேனே! கெடுத்தானே ராமன்?'' என்று சொல்லி, வெட்கத்துடனே, தலை யிறங்கிக்கொண்டு, கோபமாகப் போய்விட்டார்.

## இருபத்தொன்ரும் அத்தியாயம்

### ராமன் தலைமறைவாய்த் திரிந்தது

மேற்சொல்லிய சங்கதி நடந்த மறுநாள் அப்பாஜி தென்னுலி ராமனைப் பார்த்து, "நீ செய்த துஷ்ட வேலைக்கு ராயர் கோபித்துக்கொண்டிருக்கிருர். நாலு நாளைக்குச் சற்றுத் தலைமறைவா யிரு'' என்றுன். அப்படியே என்று, அவன் ஒரு சட்டியில் கண்மட்டும் தெரியும்படி இரண்டு இல்லி பண்ணி, அதைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு, கேட்டவர்க்கு ஒன்றுஞ் சொல்லாமல் தெருத்தெருவாய்த் திரிந்துகொண்டிருந்தான். அதை ராயர் கேள்வியுற்று, அவனை அழைத்துவரச் சொன்ஞர். ராமன் அந்தச் சட்டித் தலையுடனே ராயர் முன்னே வந்து நின்றுன். அவர், "இஃதென்ன?'' என்று குலுங்க நகைத்தார். ராமன், "மகா

ராஜாவே! என்மேல் தாங்கள் கோபித்துக்கொண்டிருக்கி றீர்களென்று அப்பாஜி என்னைத் தலைமறைவா யிருக்கச் சொன்னார். அதனால் இந்தக் காரியம் செய்தேன். இப்



போது என்ன உத்தரவோ, அதைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான். ராயர் பின்னும் அதிகமாகச் சிரித்து, ''உன்மேல் கோபமில்லை. சாலை வாங்கிப் போடு'' என்றார். ராமன், ''அப்படியானால் ஸரி! மகாப்ரபோ'' என்று, சாலை வாங்கிப் போட்டான்.

# இருபத்திரண்டாம் அத்தியாயம்

## ராமன் காவற்காரரை அடிப்பித்தது

வடதேசத்திலிருந்து பாகவத நாடகமாடும் நாடகக் கூட்டத்தார் ராயர் ஸபைக்கு வந்து, கூத்து ஆடத் தாம்பூலங் கேட்டார்கள். ராயர் அவர்களை ஆடும்படி உத்தரவு கொடுத்தார். ஆனால் அந்நாடக சாலைக்குள் தென்னாலி ராமனை விடவேண்டாமென்று காவற்காரரிருவருக்கு அவர் உத்தரவு செய்திருந்தார். உள்ளே கூத்து நடந்துகொண்டிருந்தது. அப்போது தென்னாலிராமன் முதல்வாசற் காவற்காரனிடத்தில்போய், "என்னை உள்ளே விட்டுவிடு. எனக்கு வருவதில் பாதி கொடுக்கிறேன்" என்றான். அவன் விட்டுவிட, ராமன் உள்ளே சென்று, மற்றொரு காவற்காரனிடத்திலும் தனக்கு வருவதில் பாதி தருவதாகச்சொல்லி, இசைவித்துக்கொண்டு, உள்ளே நுழைந்துவிட்டான்.

அப்பொழுது கிருஷ்ண வேஷக்காரன் வர, அவனை ராமன் அங்கிருந்த ஒரு மத்தினாலே அடித்தான். அவன் நோய் பொறாது அலற, ராமன், "நீ என்னடா கிருஷ்ணன்? அந்தக் கிருஷ்ணன் கோகுலத்திலே பல இடைச்சிகள் மத்தினாலும் பல அடி பட்டுக்கொண்டு சும்மா நின்றாரே" நீ இந்த ஓர் அடிக்கு இத்தனை கூச்சற் போடுகிறாயே' என்றான். ராயர் இந்தக் கலகத்துக்குக் கோபித்து, "ராமா! உன்னை யார் உள்ளே வரச்சொன்னார்? இவனைச் சவுக்கினால் முப்பது அடி அடியுங்கள்" என்றார். சேவகர்கள் அவனை அடிக்கத் தொடங்குகையில், அவன் "ஐயா! இன்று உள்ளே வரும்பொழுது முதல் வாயிற் காப்போனுக்கு எனக்கு வருவதில் பாதி தருவதாகச் சொன்னேன். அவ

னுக்குப் பதினைந்து அடி சேரவேண்டும்'' என்றான். "மற்றொரு பதினைந்தை நீ வாங்கிக்கொள்ளலாமன்றோ?'' என்று ராயர் கேட்க, தெனாலி ராமன், "இல்லை, இல்லை. இரண்டாம் வாயில் காப்போனுக்கும் பாதி கொடுத்து விடுகிறேன்'' என்று சொல்லியிருக்கிறேன். அவனுக்கு அந்தப் பதினைந்தடி சேரவேண்டும்'' என்றான். ராயர் இரண்டு பேரையும் வருவித்து, விசாரித்து, உண்மையை அறிந்துகொண்டு, பதினைந்து பதினைந்தடி அவ்வவர்களை அடிக்கும்படி உத்தரவு செய்தார். ராமன் தண்டனையினின்றும் நீங்கினான்.

## இருபத்து மூன்றும் அத்தியாயம்

### ராமன் கறுப்பு நாயை வெள்ளை நாயாக்குகிறேன் என்றது

ஒருநாள் ராயர் விடிந்து ஐந்து நாழிகை வரையில் நித்திரை செய்துகொண்டிருந்தார். இன்று அவர் க்ஷௌரம் செய்துகொள்ளும் தினமாகையால், அம்பட்டன் வந்து சிறிதுநேரம் காத்திருந்து பார்த்தான். ராயர் விழித்துக் கொள்ளாமையால், அவன் அவர் தூங்குகையிலேயே வெகு ஸுகமாகக் க்ஷௌரம் செய்துவிட்டுப் போய்விட்டான்.

ராயர் பிறகு விழித்துக்கொண்டு, நிலைக்கண்ணாடியில் தமது முகத்தை நோக்க, க்ஷௌரம் வெகு நேர்த்தியாகச் செய்திருந்ததைக் கண்டு, அம்பட்டனை வருவித்து, "உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். அவன், "எஜமானகளே! என்னைப் பார்ப்பார் ஆக்கிவிடவேண்டும்'' என்றான். உடனே ராயர், "ஆகட்டும் போ'' என்று சொல்லி

விட்டு, சில பிராம்மணர்களைக் கூப்பிட்டு, "இந்த அம்பட்டனை எக்யம் ஹோமம் முதலியன செய்து, புனிதனுக்கி, பிராம்மணியம் வரப்பண்ணுங்கள். பூர்வம் விச்வாமித்திரருக்குப் பிரும்மணியம் சித்திக்க வில்லையா?" என்றார்.

அந்தணர்கள் எங்கே மாட்டோம் என்றால் ராயர் ஸர்வ மானியத்தைப் பிடுங்கிப்போடுவரோ வென்றஞ்சி, அவ்வம்பட்டனை இட்டுக்கொண்டு போய், காலை மாலை மத்தியானம் என்ற மூன்று வேளைகளிலும் முழுக்காட்டி அக்கினிவளர்த்து, அதனெதிரில் உட்காருவித்து, ஹோமாதிகளைச் செய்து வந்தார்கள், ராயர் ஒருநாள் அவ்வந்தணனை நோக்கி, "இவனைப் பார்ப்பானுக்கி யாய்விட்டதா?" என்றார். பிராம்மணர்கள் அவர் கோபத்துக்கு அஞ்சி, "ஆய்விட்டது" என்றார்கள். அவர், "ஆனால் இவனோடு நாளை நீங்கள் உட்கார்ந்து ஸகபோஜனம் செய்யவேண்டும். நான் பார்க்க வருவேன்" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

பிராம்மணர்கள், பெரிதும் துக்கமுற்று, தென்னுலி ராமனிடத்து முறையிட்டார்கள். அவன் அவர்களைச் சமாதானப்படுத்தி யனுப்பிவிட்டு, ராயர் வருகிற வழியில் ஒரு குளக்கரையில் நாலு பிராம்மணர்களைக் கொண்டு, ஒரு ஹோமம் வளர்ப்பித்து, ஒரு கறுப்புநாயைக் கழுத்தில் கயிற்றைக் கட்டி, அவ்வக்கினி முன் இழுத்துவந்து, அது என்ன குரைத்துத் துள்ளித் திமிறியும் விடாமல், குளத்தில் அமுக்கி, மறுபடியும், அதை ஹோமத்தீயைச் சுற்றி இழுத்துச்சென்று பின்னும் அதைக் குளத்தில் அமுக்கி, இப்படியாக அதைச் செய்யாத இம்சையெல்லாம் செய்தான். நீருக்கும் நெருப்புக்கும் இயல்பிலேயே அஞ்சும் அந்நாய்

ராமனுடைய நிர்ப்பந்தத்தினால் மிகுதியும் நடுங்கிப் பேரோலமிட்டுக் குரைத்து ஊளையிட்டது.

இதைப் பார்த்துக்கொண்டுவந்த ராயர், "அட பாபி! இந்த ஜந்துவை ஏனடா இப்படி வதைக்கிறாய்! உனக்கு மனத்தில் ஈரமில்லையா?" என்றார். அதற்கு ராமன், "பூபாலா! இப்படியெல்லாம் செய்தால்தானே இக் கறுப்பு நாய் வெள்ளை நாயாகும்?" என்றான். ராயர், "அடா! மூடா! எங்கேயாவது கறுப்பு நாய் வெள்ளைநாயாகுமாடா? ஏனடா இந்தப் பிரயாசை?" என்றார்.

அதற்கு ராமன், "ஹா; ஹா! அப்படியா! அம்பட்டன் பிராம்மணனாகும்பொழுது கறுப்புநாய் வெள்ளைநாயாகாதா?" என்றான். உடனே ராயர் தாம் முன்னம் செய்த உத்தரவு சுத்தப் பிசகென்று, பிராம்மணரை நிர்ப்பந்தம் செய்யாது போய்விட்டார்.

## இருபத்து நான்காம் அத்தியாயம்

### ராமன் மல்லர்களை வஞ்சித்தது

அதிசூரன் என்றொரு மல்லன் பல ஸமஸ்தானங்களுக்குச் சென்று, ஆங்காங்குள்ள மல்லர்களை வென்று பல விருதுகளைப் பெற்று, ராயர் ஸமஸ்தானத்திற்கும் வந்தான். அச்செய்தி அந்த ஸமஸ்தானத்து மல்லர்கள் காதில் விழவும், அவர்கள், "இனி நமது யோக்கியதை வெளிப்பட்டுவிடும். ராயர் நம்மை அடித்து ஊரைவிட்டுத் துரத்திவிடுவார்" என்று விசனமுற்றிருந்தனர்.

தென்னலி ராமன், அவர்களை, "ஏன் துக்கமுகத்துட னிரு க்கிறீர்கள்?" என்று கேட்டான். அவர்கள் தமது துயரத் தின் காரணத்தைச் சொல்லினர். ராமன், "நீங்கள் ஒன்று க்கும் அஞ்சவேண்டாம். உங்கள் விருதுகளையெல்லாம் எனக்குக் கொடுத்து, என்னை உங்களுக்குத் தலைவனாக்கிக் கொண்டு, என் பின்னே வாருங்கள். நான் அதி சூரனை வெருட்டி விடுகிறேன்" என்றான். அவர்கள் சம்மதித்து அப்படியே செய்ய, ராமன் அதிசூரன் கூடாரம் அடித் திருந்த இடத்திற்கு எதிரே வேறொரு கூடாரம் அடித்து, வீரகேசரி என்னும் நாமத்துடன் அதில் தங்கினான்.

அதிசூரன், யாரோ ஒரு வேற்று மல்லன் வந்திருக் கிறான் என்று, அவனுடைய ப்ரவரங்களை அறிய, "இப் போது பேச அவகாசமுண்டா?" என்று கேட்டனுப்பி னான். ராமன், "இப்பொழுது அவகாசமில்லை. நாளை ராயர் ஸபையில் என்ன பேசவேண்டுமோ அதைப் பேசிக் கொள்ளலாம்" என்று சொல்லி யனுப்பிவிட்டான். மறு நாள் இராயர் முன் இருவரும் வந்ததும், "நீங்கள் மல்லு யுத்தம் செய்யலாம்" என்று அவர் உத்தரவிட்டார். தென் னலிராமன் அதிசூரனை நோக்கி, "நீர் மல்யுத்த சாஸ்திரப் படி போர் செய்வது வழக்கமா, அன்றி தடித்தனமாகச் சண்டையிடுவதா?" என்றான். அவன், "ஸகலமும் சாஸ் திர ரீதியாகவே செய்வது வழக்கம்" என்றான். ராமன், "அந்த சாஸ்திரம் முழுமையும் கற்றிருக்கிறீரோ, அன்றி அரை குறையாகத்தான் தெரியுமோ?" என்றான். அவன் "நான் பூர்ணமாகக் கற்றிருக்கிறேன்" என்றான். தென் னலி ராமன், "ஆனால் நான் சில வரிசைகள் காட்டுகிறேன். அவை எவ்வரிசைக் கிரமங்கள் என்று சொல்லும்? பார்ப் போம்" என்று, தன்னுடைய மூன்று நடுவிரலையும் குவித்

து தன் மார்பில் குத்தி, தன் இரண்டு கைகளையும் தோள் வரையில் தூக்கி விரித்து, ஆள் காட்டி விரலால் கழுத்தைச் சுற்றி, வலக்கையை இடுப்பு உயரத்தில் கவிழ்த்து, அதி சூரன் கையை அசைத்துக் காட்டினான்.

அதிசூரன், இந்த ஜாடைகளில் ஒன்றாவது தான் கற்ற மல்வரிசைகளுள் இல்லாமையால், நெடுநேரம் வரையில் யோசித்திருந்து, "நாளைக்குச் சொல்லுகிறேன்" என்று, வீட்டுக்குச் சென்று, அன்றிரவே ஓடிப்போய்விட்டான்.

மறுநாள் ராயர், அதிசூரனைக் காணாது, தெனாலி ராமனை நோக்கி, "நேற்று நீ காட்டிய மல்வரிசைகளுக்குப் பொருள் என்ன?" என்றார். அவன் முதல்நாள் காட்டிய ஜாடைகளைக் காட்டி, "மூன்று விரல்களைக் குவித்து மார்பில் குத்திக் காட்டியது: நீ முஷ்டியால் என்னைக் குத்தினால் என்பது பொருள், கையைத் தோள்வரையில் தூக்கி விரித்துக்காட்டியது: நான் வாயைப் பிளந்துகொண்டு மல்லாந்து மரித்துப்போவேன் என்பது பொருள், கழுத்தைச் சுற்றிக் காட்டியதும் இடுப்பின் உயரத்தில் கையைக் கவிழ்த்துக் காட்டியதும், அவன் கையை அசைத்துக் காட்டியதும்: அப்படி நான் மரித்து விழுந்தால், என்பெண்டாட்டி பிள்ளைகளை யார் ஸம்ரக்ஷணை செய்வார்? என்பது பொருள். இதை அந்தப் பயல் அறிந்து கொள்ளவில்லை" என்றான் ராயர் குலுங்க நகைத்து, அதிசூரனுக்கு உத்தேசித்திருந்த ஸம்மானத்தை ராமனுக்குச் செய்தார்.

## இருபத்தைந்தாம் அத்தியாயம்

### ராமன் சாஸ்திர பண்டிதரைத் துரத்தியது

ஒருநாள் ராயர் ஸபைக்கு வடநாட்டிலிருந்து வித்யா ஸாகரன் என்றொரு மகா பண்டிதன் வந்து, ராயர் ஸமஸ்தானத்து வித்வான்களைத் தர்க்கத்திற் கழைத்தான். அவர்கள் அவனுடைய புலமையைக் கேள்வியுற்று, அவனுடன் வாதம் செய்தால் நிச்சயம் அபஜயப்பட வேண்டுமென்று பயந்து, தென்னுலிராமனுடன் கலந்து ஆலோசித்தார்கள். அவன் அவர்களுக்குத் தைரியம் சொல்லி யனுப்பிவிட்டு, எள்ளுச் செடிகளின் காய்ந்த விறகுச் சுள்ளி சிலவற்றின்மேல் எருமைத் தும்பைச் சுற்றி, அதனை ஒரு பீதாம்பரத்தால் மூடிக்கொண்டு, சிறப்பான உடைதரித்து ராயர் சபைக்குச் சென்றான். அங்கே வித்தியா ஸாகரனும் வந்து, பிரஸங்கத்திற் காரம்பிக்கையில், எதிரே உட்கார்ந்திருந்த ராமனைக் கண்டு, ஒரு புலவனென்று மதித்து, "கையிலிருப்பது என்ன கிரந்தம்?" என்றான்.

ராமன், "இது 'திலகாஷ்ட மகிஷ பந்தன க்ரந்தம்.' எனது பாட்டனார் இதனைப் பண்டித ரத்னம் மகா சாஸ்திரி யிடத்தில் அப்யஸித்தார்" என்றான். வித்துவான், "இந்தக் கிரந்தத்தின் பெயரைக்கூட நாம் கேட்டதில்லையே! புதிதா யிருக்கிறதே! இதில் ஏதேனும் கேள்விகேட்டுவிட்டால் என்ன செய்கிறது?" என்று யோசித்து, அன்றைக்கு உலக வர்த்தமானம் சிலபேசிக்கொண்டிருந்து, இராத்திரி யானதும், சொல்லாமல் புறப்பட்டுப் போய்விட்டான். மறுநாள் ராயர் பண்டிதரைக் காணாது, "ராமா! நீ என்ன நூதன கிரந்தம் கொண்டு வந்தாய்?" என்று கேட்க, அவன்

அவரெதிரில் அவ்வெள்ளுச் சுள்ளிக் கட்டை அவிழ்த்து, "இவை எள்ளுச் சுள்ளிகள். அவற்றின்மேல் கட்டிய கயிறு எருமைத் தும்பு; ஆதலால் திலகாஷ்ட மகிஷ பந்தனக் கிரந்தம் என்றேன்" என்றான். ராயர் வயிறு உளையச் சிரித்து, ராமனை மெச்சினர்.

## இருபத்தாறும் அத்தியாயம்

### ராமன் திருடர்களை ஏற்றம் இறைப்பித்தது

ஒருநாள் தென்னுலிராமன் சாப்பிட்டுக் கையலம்பப் புறக்கடைக்குச் சென்றபோது, ஆங்கு இரண்டு திருடர்கள் பதுங்கி யிருக்கக் கண்டான். அவர்களை வஞ்சிக்கக் கருதி, உள்ளே வந்து, மகனுக்கும் மனைவிக்கும் ஜாடை காட்டிவிட்டு, அடா பையா! ஊரெல்லாம் திருட்டுப் பயமாக இருக்கிறது, நீ பெட்டிகளை செவ்வையாகப் பூட்டி வைத்தாயா?" என்று ஒளித்திருந்த திருடர் கேட்கும்படி சொன்னான். அவன், "செவ்வையாகத்தான் பூட்டி வைத்தேன். நீங்களும் ஒருதடவை பாருங்கள்" என்றான். ராமன், பார்க்கும் ஜாடையாகத் தன் விலையுயர்ந்த பொருள்களை யெல்லாம் பத்திரப்படுத்திவிட்டு, "அப்பா! நாம் என்ன ஜாக்ரதை செய்தாலும், திருடர் ஒரு ஸமயம் கொண்டு போய் விடலாம். ஒருபாயம் செய்ய நினைக்கிறேன். நமது விலையுயர்ந்த பொருள்களை யெல்லாம் நமது பெரிய பெட்டியில் போட்டுச் செம்மையாகப் பூட்டி, நமது தோட்டத்துத் துரவில் போட்டுவிடுவோம். சிலநாளில் இந்தத் திருட்டுப் பயம் ஒய்ந்துவிடும். நாம் முன்போல அவற்றை வைத்துக்கொண்டிருக்கலாம். உனக்கென்ன

தோன்றுகிறது ?" என்று அத்திருடர் கேட்கும்படி உரக்கச் சொன்னான். ராமன் மகன் ஸம்மதிக்க, இருவரும் ஓரோட்டைப் பெட்டியில் கல்லையும் கட்டையையும் நிரம்பப் போட்டு, வெகு சிரமப்பட்டுத் தூக்கிக்கொண்டுபோய்த் தூவில் 'துடும்' என்று திருடருக்குக் கேட்கும்படி போட்டனர்.

திருடர்கள் தென்னலி ராமன் பேச்சையும், ஜலத்தில் பெட்டி விழுந்த ஓசையையும் கேட்டு, "வலிய வரும் பொருள் காலடியில் அகப்படும் என்பது பழமொழி யல்லவா ?" என்று களித்து, ராமன் வீட்டில் எல்லாம் நிச்சப்தமாயிருப்பது கண்டு, தூவு அருகிற் சென்று, அதற்குள் இறங்கிப் பார்த்தனர். பெட்டி மிகப் பளுவாயிருந்தமையால், ஒருவன் "அண்ணே ! நாம் நீரை இறைத்துப் போட்டு, இருவருமாகப்பெட்டியை எடுத்துப்போய் விடலாம்" என்றான். மற்றவன் சம்மதிக்க, ஏற்றம் பிடித்து, இறைக்கத் தொடங்கினர்.

தென்னலிராமன் மெல்லத் தோட்டத்திற்குள் நுழைந்து, அவர்கள் இறைக்கும் நீரைச் சில நாளாகக் காய்ந்திருந்த வாழை, மா, பலா முதலிய பல விருக்ஷங்களுக்கு மடைமாறிப் பாய்ச்சி வந்தான். தூவு நீர் இறைக்க இறைக்க ஊறிக்கொண்டு வந்தமையால், விடியற்காலமாகிவிட்டது. ஏற்றத்தின் மீது நின்றவன், "அண்ணே ! கிழக்கு வெளுத்துவிட்டது" என்றான்.

ராமன், "நமது தோட்டமும் பாய்ந்துவிட்டது" என்றான். அவர்கள் திடுக்கிட்டு, "ஓகோ! மோசம் போனோம்!" என்று சொல்லி, ஓட்டம் பிடித்தனர்.

# இருபத்தேழாம் அத்தியாயம்

## ராமன் குதிரை வளர்த்தது

அரபி தேசத்திலிருந்து சில துருக்கர்கள் வெகு நேர்த்தியான குதிரைக் குட்டிகளாக ஆயிரம் கொண்டு வந்து, ராயரிடத்திற் காட்டினர். ராயர் அவை எல்லாம் நல்ல லக்ஷணமமைந்திருந்ததை நோக்கி, தமது ஸமஸ்தானத்திற்கு இவ்வளவு வேண்டும் இவ்வளவு வேண்டாம் என்பதை நோக்காது, நூறு நூறு பொன் கொடுத்து, அவற்றை எல்லாம் வாங்கி விட்டார்.

பிறகு அவற்றை வளர்க்கும் வழி யாது என்று அவர் ஆலோசித்து, அப்பட்டணத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு குட்டியாக விட்டு, அவற்றின் தீனிச்செலவுக்காக நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு வராகன் விழுக்காடு கொடுத்து வந்தார். தென்னாலி ராமன் தானும் ஒரு குட்டி வளர்ப்பதாக ராயரிடத்திலிருந்து ஒன்று வாங்கிப் போய், அதை நாலு பக்கமும் உயர்ந்த சுவர்களுள்ள ஓர் இருட்டு அறையில் அடைத்து, சுவரில் ஓர் சிறு துவாரம் செய்து, அத்துவாரத்தின் வழியாய்க் காலை ஒரு பிடி புல், மாலை ஒரு பிடி புல் மாத்திரம் போட்டு, மத்தியானத்தில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றிக் குடிக்கச்செய்து, ராயர் கொடுக்கும் வராகனைத் தான் எடுத்துக்கொண்டான்.

மூன்று வருஷங் கழிந்ததும், ராயர் எல்லோருடைய குதிரைக் குட்டிகளையும் கொண்டுவரச் சொன்னார். அப்படியே எல்லோரும் கொண்டுவர, அவை மினுமினுவென்று வெகு நேர்த்தியாய் விளங்கின. ராயர் பார்த்து, ஸந்தோஷித்து, "தென்னாலிராமா! உன் குட்டி எங்கே?" என்றார்.

அவன், "என் குட்டி இப்படி எல்லாம் ஒருவர் இருவரால் பிடித்துவர முடியுமா? உமது ராணுவத்தில் பலிஷ்டனு யிருக்கிற ஒரு துருக்கனை அனுப்புங்கள். அவனைக் கொண்டு, என் குட்டியை இங்குச் சேர்ப்பிக்கிறேன்" என்றான். ராயர், "அப்படிப்பட்டதா உன் குதிரை? நாமே நேரில் வந்து பார்ப்போம்" என்று ஒரு முரட்டுத் துருக்கனை அழைத்துக்கொண்டு வந்தார்.

ராமன், "ஓ! துருக்கரே! எனது குதிரை மிகப்பொல்லாதது. நீர் ஜாக்ரதையாக அதை அவ்வோட்டை வழியாய்ப் பாரும்" என்றான். அத்துருக்கனுக்குத் தாடி வெகு நீளம். அவன் துவாரத்தின் வழியாகப் பார்த்து, உள்ளே இருட்டா யிருந்தமையால், மெல்ல அதன் வழியாய்த் தலையை உள்ளே நுழைத்தான். அது மாலைப்பொழுதாகையால், அக்குதிரை புல்தான் வருகிறதென்று துருக்கன் தாடியைப்பற்றி இழுத்தது. துருக்கன், தாடிபோய் விட்டதே என்று தலையை இழுத்துக்கொண்டான். குதிரை புல்லை விடப்படாதென்று, அவன் தாடியைப் பலமாகப் பற்றிக்கொண்டது. துருக்கன் வலி பொறுக்காமல் கதறினான். இதை ராயர் கண்டு, "ராமா! உன் குதிரை மிகப் பொல்லாததா யிருக்கிறதே; நாம் கொடுக்கும் ஒருவாகனுக்கு மேலேயும் தீனி போடுவையோ!" என்றார். ராமன், "மகாப்பிரபோ! அதை யேன் கேட்கிறீர்கள்? நான் இக் குதிரை விஷயமாகப் படுகிற பாடு யாருக்குத் தெரியும்?" என்றான். ராயர், "சுவரை இடித்துப்போட்டு, பத்துப் பேராய்க் குதிரையைப் பிடியுங்கள்" என்று உத்திரவிட்டார்.

அப்படிச் செய்து, குதிரையைப் பார்க்கும்போது, அது எலும்பும் தோலுமாகப் போய், நிற்கவும் சக்தியற்றிருந்தது. ராயர், "அடா! பாவி! ஏனடா இப்படி அருமங்

தன்ன குட்டியைக் கெடுத்தாய்?" என்று கோபிக்க, ராமன் "மகாப் பிரபோ! இதை இந்த ஸ்திதியில் வைத்திருக்கையிலேயே, 'வஸ்தாத்து' த் தருக்கனைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்றதே, நான் நல்ல தீனி போட்டு வளர்த்திருந்தால், மகாராஜா ஸமஸ்தானத்தை இது வைக்குமா?', என்ருன். ராயர், அப்பொழுதைக்குச் சிரிப்பதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லாமல் அரண்மனை போய்ச் சேர்ந்தார்.

## இருபத்தெட்டாம் அத்தியாயம்

### ராமன் நாய்வாலில் குணக்கெடுத்தது

ஒருநாள் ராயர் ஸபையில் ஒரு வித்வான், "நாய்வாலை நிமிர்க்க முடியாது" என்ருன். அதற்கு மற்ரெரு புலவன், "நான் நிமிர்ப்பேன். முடியாது என்ற காரியம் இல்லை. எல்லாம் மனம் வைத்தால் ஆகும்" என்ருன். ராயர், "நாயின் வாலை நிமிர்ப்பவர்க்கு நூறுவராகன் கொடுப்பேன்" என்ருர்.

அப்பொழுது, ஆங்கிருந்த சிலர் தாம் ஆறுமாதத்திற்குள் நாய் வாலை நிமிர்த்துக்கொண்டு வந்து காட்டுவதாகச் சொன்ஞர்கள். ராயர் ஸரியென்று, நல்ல ஜாதிநாய்க் குட்டிகளாய் ஆளுக்கொன்று கொடுத்து அவற்றின் சம்ரக்ஷணைக்காக மாசம் பத்து வராகன் கொடுத்து வந்தார்.

தென்னலி ராமன், "நானும் முயன்று பார்க்கிறேன்" என்ருன். ராயர் அவனிடத்தும் ஒரு ஜாதிக்குட்டி கொடுத்து, மாதம் பத்து வாராகன் கொடுத்து வந்தார்.

நாய்க்குட்டியுடன் வீட்டிற்குச் சென்றவர்களில், சிலர் அவற்றின் வாலில் பெரிய கற்களைக் கட்டித் தொங்கவிட்டனர். சிலர் மூங்கில் குழாயில் அதை நுழைத்து வைத்தனர். சிலர் சிம்பு வைத்துக் கட்டினர். சிலர் கயிற்ருல் இழுத்துக் கட்டினர். இப்படியாய்ப் பலரும் பலவிதமாகச் செய்து, ராயர் கொடுத்த வராகனைக் கொண்டு, நாய்க்குட்டிகளைக் கொழுக்க வளர்த்து வந்தனர்.

தென்னுலிராமன் வீடுசென்றதும், தன் நாய்க்குட்டிக்குக் காலையில் ஒரு கவள அன்னமும், இராத்திரியில் அரைக்கவள அன்னமுமே போட்டு, வெளியில் விடாமல் கட்டி வைத்தான். அது நாளுக்குநாள் இளைத்து, கைகால்களை அசைக்கமாட்டாமல் கிடந்தது.

ஆறுமாதம் கழிந்ததும், ராயர் உத்தரவினுல் எல்லாரும் நாயைக் கொண்டுவந்து நிறுத்தினர். தென்னுலி ராமனே தன் நாயை ஒரு சிறு பெட்டியில் போட்டு அப்பெட்டியை ஒரு பட்டுப் பீதாம்பரத்தால் மூடி, ஒரு வண்டிமேல் வைத்து இழுத்து வந்தான். முதலில் ராயர் ராமனைப் பார்த்து, "எங்கே உன் நாய்; எப்படி யிருக்கிறது, பார்ப்போம்?" என்றனர். அவன், "நான் கடைசியில் காட்டுகிறேன்" என்ருன். ராயர் மற்றவர்களை நோக்கி, "எங்கே உங்கள் சாமர்த்தியத்தைப் பார்ப்போம்?" என்ருர். எல்லாரும் தம்தம் நாயின் வாலிற் கட்டியிருந்ததை எடுத்து விட்டவுடனே, வால்கள் முறைத்துக்கொண்டு, எப்பொழுதையும் விட அதிக விறைப்புடன் மேல் நோக்கி வளைந்துகொண்டன.

ராயர் பார்த்து, "சீ! உங்கள் சாமர்த்தியம் இவ்வளவு தானு?" என்று, தென்னுலி ராமனை நோக்கி, "எங்கே உன்

னுடைய கைவீச்சைப் பார்ப்போம்!'' என்றார். ராமன், மெல்லப் பெட்டியை எடுப்பித்து, உள்ளிருந்த நாய்க்குட்டியை வெளியில் எடுத்துவிட, அது வாடிய புடலங்காய் போலத் துவண்டு கிடக்க, அதன்வால் கிழித்துப் போட்ட நார்போல் ஒழுங்காய்க் கிடந்தது. ராயர், "ஐயையோ! என் நாய்க்குட்டியைக் கெடுத்து விட்டாயே!'' என்ன அவன், "அரசே! என்னை நாய்க்குட்டி வளர்க்கச் சொன்னீர்களா, அதன் வாலை நிமிர்க்கச் சொன்னீர்களா?'' என்றான். "அவர் அவனுடைய உபாயத்தை மெச்சி, நூறுவாரானையும் கொடுத்து விட்டார்.

## இருபத்தொன்பதாம் அத்தியாயம்

### ராமன் பால் வேண்டாப் பூனையையும் பழம் வேண்டாக் குரங்கையும் ராயருக்குக் காட்டியது

ஒருநாள் ராயர் ஸபையில் ஒரு வித்வான் 'பால்வேண்டாப் பூனையும் பழம்வேண்டாக் குரங்கும் இல்லை?' என்றான். அதற்குத் தென்னாலிராமன், "இருக்கின்றன. நான் ராமேச்வர யாத்திரை சென்றிருந்தபோது ஓரிடத்தில் அவ்விரண்டையும் கண்டேன்'' என்றான். ராயர், "அப்படியிருந்தால், நீ அவற்றைக் கொண்டுவந்து காட்டவேண்டும்'' என்றார்.

ராமன், "எனக்குச் செலவுக்கு நூறு வராகனும் ஆறுமாத கெடுவும் வேண்டும்'' என்றான். ராயர் அப்படியே கொடுத்தார். அவன் அன்றைக்கு ஒரு பூனைக் குட்டியைப் பிடித்துவந்து, சுடச்சுடப் பாலைக் காய்ச்சி,

அப்பாலில் அப்பூனைக்குட்டியின் வாயை பலாத்காரமாகத் தோய்த்தான். அது வாய் வெந்து கத்திக்கொண்டு ஓடிற்று. அன்று முதல் அதைப் பாலின் அருகில் கொண்டு வந்தால், அது நடுங்கி ஓடத் தலைப்பட்டது. அப் பூனைக்குட்டி இனி பாலை வேண்டாது என்று அறிந்த பிறகு, ராமன் ஒரு குரங்குக்குட்டியைக் கொண்டுவந்து, அதற்கு வாழைப்பழத்தில் இஞ்சியைச் செருகிக் கொடுத்தான். அது அப்பழத்தோடு இஞ்சியைத் தின்றதும், காரம் தாங்காமல் கண்களில் நீர் பெருக்கி, கிரீச்சிட்டது. இப்படியாக அதற்கு மாம்பழம் முதலிய பழங்களில் இஞ்சி, மிளகு முதலிய காரவஸ்துக்களைச் செருகிக் கொடுக்க, அது உறைப்புக்கு அஞ்சி, பழங்களைக் கண்டால் ஓடத் தலைப்பட்டது.

ராமன் ஆறுமாஸக் கெடு கழிந்ததும் ராயர் ஸபைக்கு அவ்விரண்டையும் கொண்டுவந்து, "பரீக்ஷித்துப் பார்த்துக் கொள்ளலாம்" என்றான். அவர் அப்படியே செய்து பார்த்து, அவ்விரண்டும் பாலுக்கும் பழத்துக்கும் அஞ்சியோடக் கண்டு, அதிசயித்துப் பின்பு தென்னுலிராமன் செய்த யுக்தியைக் கேட்டு, வயிறு உளையச் சிரித்தார்.

## முப்பதாம் அத்தியாயம்

### தென்னுலி ராமன் ராயர் தகைமையைப் பரிசோதித்தது

தென்னுலி ராமன் ஒருநாள் விசனமாக இருப்பதை ராயர் நோக்கி, "நீ யேன் துக்கிக்கிறாய், உனக் கென்ன குறை?" என்றார். அப்பொழுது ராமன் அழுத கண

னும் சிந்திய மூக்குமாக, "பிரபோ! சோதிடர்கள் என்னை "இரண்டொரு மாதத்தில் இறந்து போவாய்" என்றனர். எனக்குப் பிற்காலம் என் குடும்பத்தை என்னைப்போல் ஆதரிப்பார் ஒருவருமில்லையே என்று கிலேசப் படுகிறேன்" என்றான். ராயர், "அதைக் குறித்து நீ அஞ்சாதே. உன்னிலும் பதின் மடங்கு அதிகமாக உன் குடும்பத்தை நான் காப்பேன். எனக்கு இது ஒரு பெரிதா?" என்று நம்பிக்கையாகச் சொன்னார்.

இதற்குப் பிறகு ராமன் வரவர நோய் அதிகரித்தவன் போலப் பாசாங்கு பண்ணிக்கொண்டு வந்து, ஒரு நாள் இறந்து போனதாக எல்லாரும் நம்பும்படி ஏதோ உபாயம் பண்ணி, தன் பெட்டியில் இருந்த ஆபரணங்களையும் பணம் முதலியவைகளையும் வேறோரிடத்தில் வைத்து விட்டு, அதில் தான் புகுந்துகொண்டிருந்தான்.

அவன் இறந்தானென்ற செய்தி ராயர் கேட்ட மாத்திரத்தில், அவனிடத்தில் திரவியம் ஏராளமாக இருக்கிறதென்று கேள்வியுற்றிருந்தபடியால், சில சேவகரை அனுப்பி, அவன் வீட்டுப் பணப்பெட்டியைச் சீக்கிரத்தில் எடுத்துவரக் கட்டளை இட்டார்.

அவர்கள் அவ்வாறே அதைத் தம் அரசனிடத்தில் கொண்டு போனார்கள். அவர் வெகு ஆசையோடு அப்பெட்டியைத் திறந்துபார்க்க, தென்னலி ராமனைக் கண்டு "ஓகோ! நீ செத்துப் போனாய் என்றார்களே!" என்றார்.

ராமன், "வெகு அழகு! உம்மை நம்பிச் சாகலாமா? நீர்தானா என் குடும்பத்தை ரக்ஷிப்பவர்?" என்றான். ராயர் வெட்கப்பட்டுச் சும்மா இருந்துவிட்டார்.

Printed at the Guardian Press, Madras, 1922.

## நவீன கதா மாலிகா

| | | | |
|---|---|---|---|
| தசகுமார சரிதம் (முதல் பாகம்) ... | 0 | 3 | 0 |
| அன்பு வல்லி ... ... ... ... | 0 | 4 | 0 |

### பாலபக்ஷணீயம்

| | | | |
|---|---|---|---|
| 1. மல்லிகா ... ... .... ... | 0 | 2 | 0 |
| 2. தென்னுலி ராமன் ... ... ... | 0 | 2 | 0 |
| 3. சீலஸம்பன்னன் ... ... ... | 0 | 2 | 0 |
| 4. ஸூக்ஷ்மதரிசி... ... ... ... | 0 | 4 | 0 |

### விநோதக் கதைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. ஆறு பராக்ரமசாலிகள்... ... ... | 0 | 2 | 0 |
| 2. தாமஸ் கெல்லி... ... ... ... | 0 | 2 | 0 |
| 3. மைகேல் பாரடே ... ... ... | 0 | 2 | 0 |

### நீதி நூல் மாலை

| | | | |
|---|---|---|---|
| 1. ஆத்திசூடி (மூலமும்-உரையும்) ... | 0 | 0 | 9 |
| 2. கொன்றைவேந்தன் ,, ... ... | 0 | 0 | 9 |
| 3. வெற்றிவேற்கை ,, ... ... | 0 | 0 | 9 |
| 4. மூதுரை ,, ... ... | 0 | 0 | 9 |
| 5. உலகநீதி ,, ... ... | 0 | 0 | 9 |
| 6. நல்வழி ,, ... ... | 0 | 0 | 9 |
| 7. நன்னெறி ,, ... ... | 0 | 1 | 0 |
| கட்டுரைத் தொகுதி ... ... | 0 | 8 | 0 |

### கதைக் கொடி

வே. இராஜகோபால ஐயங்கார், எழுதியன.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| முதல் மலர் — இதழ் | | I | சண்பகமொட்டு | 0 | 1 | 6 |
| do | do | II | தங்கக் கிளி* | 0 | 1 | 6 |
| do | do | III | பொன் ஆடு* | 0 | 1 | 6 |
| இரண்டாம் மலர்—do | | | உத்தம சேவகன் | 0 | 2 | 6 |
| do | do | II | இராஜவைத்தியன் | (அச்சில்) | | |
| do | do | IIII | மயில் நர்த்தனம் | (அச்சில்) | | |